மலர்: 03 —— வைகாசி - ஆனி —— இதழ்: 03

# அனல்

இணை ஆசிரியர்கள்

- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.05.2011

## பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - நிறைவின் இரகசியம்
* வினா விடை - 45
* எது அவசியம், அவசரம்
* வாழ்க்கையின் நோக்கம் என்ன?
* வாலிபர் வளாகம் - இயேசுவுக்கு நீ வேண்டும்!
* நற்செய்தி - பெயர் தெரியாதவர்கள் செய்த பெரிய வேலை
* பக்தர்களின் பயிலகம்
* அருட்பணியாளர் சரிதை
* மூவரி முத்துக்கள்
* அனலின் ஆன்மீக விருந்து
* குறுக்கெழுத்துப்போட்டி - 43


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள். ஐந்தாம், ஆறாம் மாத அனல் சஞ்சிகையூடாக மறுபடியும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வேதம் சொல்லுகிறது, **தேவன்அன்பாகவே இருக்கிறார். பிரதியுபகாரம் எதிர்பாராத அவருடைய அன்பின் வெளிப்பாடாக அவரே எம்மைத் தேடிவந்தார். முழுக்கு முழுக்க மனிதனின் நன்மைக்காகவே அவர் தம் அன்பை வெளிப்படுத்தினார்.**

யோவான் சுவிசேஷம் 11ம் அதிகாரத்திலே பார்க்கின்றோம், இயேசு கிறிஸ்து மார்த்தாளிடத்திலும், மரியாளிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார. **"யோவான் 11:5 இயேசு மார்த் தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்".** நம் அனைவரிடமும் தேவன் கிறிஸ்து மூலமாக ஒரேவிதமான தம் அன்பை வெளிப்படுத்துகிறார். தம் அன்பின் வெளிப்பாட்டைக் காண்பித்துவிட்டார். அதை இன்றும் சொரிந்து கொண்டேயிருக்கின்றார்.

***அவரின் அன்புக்கீடாக நாம் எதைக் கொடுக்கப்போகின்றோம். மார்த்தாள், மரியாள், லாசரு இவர்களிடம் இயேசு ஒரே மாதிரி அன்புகூர்ந்தார். ஆனால் அந்த அன்புக்கு ஈடாக மரியாள் மட்டுமே அவர் மீது அன்பை செலுத்தினாள். அவருடைய பாதத்திலே அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். (லூக்கா 10:37–42).***

தேவனை உண்மையாக ஆராதிப்பதின் அடையாளமாக விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் துடைத்தாள். வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.

தம் மீது அன்பு செலுத்தும் ஆண்டவருக்கு மரியாள் தன்னையும், தனக்குரியதையும் கொடுத்துவிட்டாள்.

நீயும் ஆண்டவர் உன்மீது வைத்த அன்புக்கீடாக என்ன செய்யப்போகின்றாய். அவர் பாதத்திலே உன்னை ஒப்படைப்பாயா? உன் வாழ்வினால் அவரை உயர்த்துவாயா? **அவர் உன்னை ஆசீர்வதிப்பாராக.**

**- ஆசிரியர் -**




# நிறைவின் இரகசியம்



**சி**ரித்த முகத்துடனும் பரபரப்புடனும் தனது தாயாருக்கு அருகினிலே நின்று கொண்டிருந்தாள் ஐந்து வயது நிரம்பிய ஷமி. அது ஒரு அழகான கடை. திரும்பும் இடமெல்லாம் மனதை பறிக்கும் அழகுள்ள பொருட்கள் அடுக்கப்பட்டிருந்தன. **திடீரென ஷமியின் கண்கள் அங்கு ஓர் கண்ணாடி பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த அழகான முத்துமாலை ஒன்றின் மேல் பதிந்தன.** அதன் அழகு அந்த சிறுமியின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தது.

அம்மா! அம்மா! அந்த அழகான முத்துமாலையை நான் எடுத்துக் கொள்ளலாமா? அதை நான் வாங்க முடியுமா? தயவு செய்து எனக்கு அதை வாங்கித்தருவீர்களா? என ஷமி கெஞ்சிக்கொண்டேயிருந்தாள். தாயார் அந்த முத்துமாலை வைக்கப்பட்டிருந்த அந்த அழகான பெட்டியை எடுத்து அதன் விலையைப் பார்த்தாள. "100 ரூபாய்" என்றார். சிறுமியின் கண்கள் அகல விரிந்தன. தாயின் பதிலை எதிர்நோக்கினாள். அப்போது அந்த தாய் "இது உனக்கு பிடித்துள்ளதா? அப்படியானால் நீயே பணம் சேர்த்து இதை வாங்கிக்கொள்: அப்போது உன் மனம் இன்னும் நிறைவாய் இருக்கும் என்றார்" குழந்தை ஷமியின் முகத்தில் ஏக்கம் படர்ந்தது. "என்னிடம் அவ்வளவு பணம் இல்லையே" என்றாள். தாயார் "சரி நான் ஒரு பங்கு தருவேன். விரைவில் உனது பிறந்தநாள் வருகிறதல்லவா? அப்போது உனக்கு கிடைக்கும் பணத்தை சேர்த்துக்கொள்" என்றார். ஷமிக்கு ஒரு நம்பிக்கை. நான் எப்படியாவது பணம் சேர்த்து இதனை வாங்குவேன் என தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

ஒரு சில நாட்கள் கடந்தன. ஒருவாறாக அவள் தனக்கு தேவையான தொகையை சேர்த்துவிட்டாள். ஆனால் அதற்காக அந்த சிறுமி செய்த தியாகங்கள் அநேகம் தான். அந்த நாளும் வந்தது. **அவள் அதிகமாக நேசித்த அந்த முத்துமாலை அவளது கழுத்திலே**

தவழ்ந்தது. ஷமி தான் எங்கு சென்றாலும் அதை அணிவாள். தன் நண்பிகளிடம் அதைக் குறித்து சந்தோஷமாகவும் பெருமையாகவும் பேசுவாள். அதை மிகவும் கவனமாக பாதுகாத்தாள். அவை நிஜமான முத்துக்கள் அல்லாததால் அவற்றின் பளபளப்பு குறைவடையும் என தனது தாயார் சொன்னது அவளவு மனதிலே பதிந்திருந்தது.

ஷமிக்கு மிகவும் அன்பானவர் அவளது அப்பா. ஒவ்வொரு நாளும் அவள் படுக்கைக்கு செல்ல முன் அவர் அவளோடு கூட இருந்து அவளுக்கு கதைகள் சொல்வார். ஷமிக்கு தனது அப்பா என்றால் அலாதி பிரியம். எப்போதும் தனது அப்பாவின் அணைப்புக்காகவும் அன்புக்காகவும் ஏங்குவாள். "எனது அன்பான அப்பாவை போல இந்த உலகத்திலே யாருமே இல்லை" என அடிக்கடி சொல்வாள்.

ஒரு நாள் இரவு ஷமியின் அப்பா அவளுக்கு கதைகள் சொல்லி முடித்த பின்பு அவளை பார்த்து "ஷமி! நீ என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டார். ஆம் அப்பா! நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்" என்றாள் ஷமி. "உன் முத்து மாலையை எனக்குத் தருவாயா?" என்றார் அப்பா. "ஐயோ! அப்பா என்னிடம் வேறு ஏதாவது கேளுங்கள் நான் தருகிறேன்! எனக்கு முத்துமாலை வேண்டும் அப்பா" என்றாள் கவலையுடன். "பரவாயில்லை ஷமி. நான் உன்னை நேசிக்கிறேன். படுத்துக்கொள்!" எனக்கூறிவிட்டு சென்றார் அப்பா.

இரண்டு மூன்று தடவைகள் இவ்வாறே நடந்தது. அப்பா கேட்டபோது முத்துமாலையை அவளால் கொடுக்க முடியவில்லை. அவளது தந்தையும் அவளை நேசிப்பதாக கூறி முத்தமிட்டு சென்றுவிடுவார்.

சில வாரங்களின் பின் ஒரு நாள் தந்தை ஷமியிடம் சென்ற போது அவள் தனது கட்டிலின் மேல் சோகத்துடனும் ஒருவித படபடப்புடனும் இருந்ததை அவதானித்தார். என்ன நடந்தது என அவளிடம் வினவிய போது, அவள் தனது அப்பாவை அணைத்து முத்தமிட்டுவிட்டு அவரது கரங்களைபற்றி அதிலே தனது முத்துமாலையை வைத்து, "அப்பா நான் உங்களை நேசிக்கிறேன். இதை வைத்துக்கொள்ளுங்கள்" என்றாள். தந்தையின் கண்கள் கலங்கின. ஒரு கையால் அந்த முத்துமாலையை எடுத்தவர் மற்ற கரத்தினால் தனது பொக்கற்றினுள் இருந்து ஒரு பெட்டியை எடுத்து ஷமியின் கையில் வைத்தார். அவள் அதை திறந்த போது கண்ணைப் பறிக்கும் பளபளப்புடன் அழகு நிறைந்த ஓர் முத்துமாலை. "இவை உண்மையான முத்துக்கள்" என்றார் அப்பா.

அந்த விலையேறப்பெற்ற முத்துமாலை அந்த தந்தையிடம் எப்போதுமே இருந்தது. ஷமி தனது பொக்கிஷத்தை அவரிடம் கொடுக்கும் வரை அவர் காத்துக்கொண்டிருந்தார். நிறைவு என நினைத்திருந்த குறைவை கொடுத்த போது உண்மையான நிறைவைப் பெற்றாள்.

எமது பரம பிதாவும் இதே போலத்தான் காத்திருக்கிறார். நாம் விலையேறப்பெற்றவை என நினைத்திருக்கும் குறைவானவைகளை கொடுக்கும்வரை காத்திருக்கிறார். அப்போது விலையேறப்பெற்ற அழகான பொக்கிஷங்களால் எம்மை ஆசீர்வதிப்பார். அதன் இடத்தில் அதைவிட ஒரு நிறைவான காரியத்தை தராமல் தேவன் ஒரு போதும் ஒன்றையும் உங்களிடம் இருந்து எடுத்துக்கொள்ளமாட்டார். குறைவை நிறைவாக்குவார் எங்கள் இயேசு!!!.

கெ. இன்பரூபன்



## வினா விடை – 45



01. தேனைச் சாப்பிட்டதினால் கண்கள் தெளிந்தவன் யார்? யோனத்தான் I சாமு 14:27
02. வறுத்த கோதுமையைச் சாப்பிட்டு திருப்தியடைந்தவள் யார்?
2018 03. கண்கள் பிடுங்கப்பட்டு (கெடுக்கப்பட்டு) இரண்டு வெண்கல விலங்குகளால் கட்டப்பட்ட இருவர் யார்? யார்?
04. "நான் உங்கள் ஒவ்வொருவனுடைய வலது கண்ணைப் பிடுங்கி இஸ்ரவேலில் நிந்தையை வரப்பண்ணுவேன்" என்று சொன்னவன் யார்?
2018 05. "கண்மணியைப் போல என்னைக் காத்தருளும்" என்று ஜெபித்தவன் யார்?
2019 06. கர்த்தர் யாரை தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்?
07. ஏழு கண்களுள்ள ஒரு கல்லைக் குறித்து எங்கே எழுதியிருக்கிறது?
08. ஏழு கண்களுள்ள ஒரு ஆட்டுக்குட்டியைக் குறித்து எங்கே எழுதியிருக்கிறது?
09. "சுயநலம் தேடாது சுயதேசம் விட்டவள், பகலெல்லாம் பணி செய்து சம்பாதித்துத் தந்தவள், என் சொற் தட்டாது நடந்து வந்தவள், மகளிலும் அரிதான என் மருமகள்" யார்?
10. "தாய் தகப்பனற்றவன், தசமபாகம் பெற்றவன், தந்தை ஆபிரகாமிலும் பெரியவன், அண்ணன் ஆரோனிலும் பெரியவன்" – யார்?

# எது அவசியம் அவசரம்




1. ஜெபம் பிரசங்கியாரை உருவாக்க வேண்டும்.
2. ஜெபத்தினால் தேவனுடைய ராஜ்ஜியம் வல்லமையாக பரம்புகிறது.
3. ஜெபமே தியானத்தின் பிறப்பிடமாகவும் வாய்க்காலாகவும் இருக்கிறது.
4. ஜெபங்கள் ஒரு போதும் அழிவதில்லை.
5. ஜெபம் நமது உடலிலும், உள்ளத்திலும், இரத்தத்திலும், எலும்புகளிலும் ஊடுருவிப் பாயக்கூடியதாக இருக்க வேண்டும்.
6. ஜெபமில்லாத பிரசங்கம் சாகடிக்கும் பிரசங்கம்.
7. ஜெபமற்ற செயல்கள் உயிரற்றதே.
8. அடிக்கடி ஜெபித்தல் அருமையான பண்பு.
9. நன்றாக ஜெபிப்பவன் நன்றாக வாழ்வான்.



# வாழ்க்கையின் நோக்கம் என்ன?



**நீ**ல கில்லிமீன் தான் குறைந்த வாழ்நாட்களுள்ள. முதுகெலும்பு உள்ள உயிரினம் என்று அறிவியல் அறிஞர்கள் நினைத்து இருந்தனர். ஆபிரிக்கக்காடுகளின் மழை நீர் குட்டைகளில் வசிக்கும் இந்த சிறிய மீன்களின் வாழ்க்கை சுழற்சி குட்டைகள் வற்றிப்போகும் **12 வாரங்களுக்குள்ளேயே** முடிகின்றன.






ஆனால் ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் குக் பல்லைக் கழக ஆராட்சியாளர்கள் இன்னும் குறுகிய ஆயுள் உள்ள **"பிக்மி கோபி"** என்னும் சிறு மீன்களைக் கண்டறிந்துள்ளனர். பவளப்பாறை களில் வசிக்கும் இம் மீன்களின் **ஆயுள் 56நாட்கள்** தான். விரைவாக வாழ்ந்து சீக்கிரமே அழிந்து விடுகின்றன. இவ்வினம் அழிந்து போகாத வகையில் இவற்றின் இனப்பெருக்க சுழற்சி அமைந்துள்ளது.

**வேகமாக ஓடி விரைவில் முடிந்து போகும் வாழ்க்கையின் நோக்கம் தான் என்ன?** உலக மகா ஞானி இக் கேள்வியைக் கேட்டார். இஸ்ரவேலின் மூன்றாவது அரசனாகிய சாலமோன் கடைசி காலத்தில் தேவனை விட்டு விலகிப்போனார். ஆன்மீக வாழ்வில் குழப்பமுற்று வாழ்வின் நோக்கம், செல்லும் திசை தெரியாமல் போனார். தனது சாதனைகள் எல்லாவற்றையும் பார்த்து அவைகள் மதிப்பு இல்லாததாக கண்டார். **தேவனை நினைத்தபோதோ ஓர் உண்மையைக் கண்டார்.**

**"நாம் நமக்காக மட்டும் வாழவில்லை, அவரை (இயேசுவை) ஆராதிக்கவும் முடிவில்லாத வாழ்வை அவருடன் அனுபவிக்கவும் வாழ வேண்டும்.**

**நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதில்லை, மாறாக நாம் அவற்றை எவ்விதம் பயன்படுத்தினோம் என்று நித்தியமான தேவன் சொல்கின்றார் என்பதில் தான் வாழ்வின் முக்கியத்துவம் இருக்கின்றது.**



ரேமா



# வாலிபர் வளாகம்

## இயேசுவுக்கு நீ வேண்டும்!




**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

உன்னுடைய இந்த பருவம் இயேசுவுக்கு வேண்டியிருக்கின்றது. அவர் அதை உன்னிடம் எதிர்பார்க்கின்றார். **கீழ்ப்படிவோடு கூடிய பயபக்தியுடன் உன் இளமை நாட்களை அவர் கரத்தில் ஒப்படைப்பாயா?** இன்று அனேகர் தங்களுடைய முழு வாழ்க்கையையும் உலகத்திற்கும் தேவையற்ற காரியங்களிற்கும் தாரைவார்க்கின்றார்கள். **ஆனால் நீ இயேசுவுக்கு வேண்டும்.** காரணம் அவர் தான் உன்னை உருவாக்கினார். உன்னை மீட்டுக்கொள்ளும்படியாக உனக்காக இரத்தம் சிந்தினார். இன்றும் கூட உனக்காக ஆவலாய் காத்து நிற்கின்றார்.

**தங்களை ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புவித்த சிலரைப் பார்ப்போம்.**

### பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? (வாலிபனாகிய யோசேப்பு)

உன்னை உலகமும் இழுக்கும். அதே நேரம் நீ தேவனுக்கும் வேண்டும். **உன் தீர்மானம் எதுவாக இருக்கப் போகின்றது.** யோசேப்பு தன் தீர்மானத்திலும், செயலிலும் உறுதியாக இருந்தான். தான் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது இல்லை என்பதாக, பரிசுத்தமாய் வாழ தன்னை ஒப்புக்கொடுத்த ஓர் உத்தம வாலிபன் வாழ்க்கையில் பல ஆண்டுகள் வேதனை பாடுகளுக்குள்ளாக சென்றான். ஆனாலும் முடிவிலே தேவனுக்



காய் பிரகாசித்தான். அனேகருடைய ஜீவனைக் காக்கின்ற ஒருவனாக அவன் இப்போது பெலப்பட்டு தேவனால் பயன்படுத்தப்பட்டான். **1தெசலோனிக்கேயர் 5:22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.**

*இயேசுவுக்கு நீ வேண்டும். அவருக்கு உன் வாழ்வை ஒப்படைப்பாயா? உன் சரித்தையும் கொடுக்க மறந்துவிடாதே. எங்கு சென்றாலும் (பாடசாலை. வேலைத்தளம். நண்பன்(பி) வீடு. உறவினர் வீடு. பொது இடங்கள். வைத்தியசாலை) தேவனை முன்பதாக நிறுத்திவை.*

## ஆசரிப்பு கூடாரத்தை விட்டுப்பிரியாதிருந்தான். (யோசுவா)

யோசுவா என்னும் வாலிபன் மோசேயின் பணிவிடைக்காரனாக இருந்த போதிலும் கூட மோசேயினுடைய பதவியை அல்ல அல்லது




மககளுடைய ஆதரவையும் அல்ல. மாறாக தேவனுடைய மகிமை நிறைந்த அந்த பிரசன்னத்திலே மூழ்கிப்போவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தான். எதுவும் அவனை தேவனோடுள்ள உறவிலிருந்தும், ஆராதனையிலிருந்தும், தேவகாரியங்களில் ஈடுபடுவதிலிருந்தும் பிரிக்க முடியவில்லை. **இன்று உன் நிலைமை எவ்வாறுள்ளது? இயேசுவுக்கு நீ வேண்டும்.**

*தம்பி. தங்கையரே தேவனையும். தேவசெயலையும். தேவபிரசன்னத்தையும் சுற்றி சுற்றி வருவாயா. அவனுக்கு அதைவிட்டு பிரியகூட மனசு இல்லாது இருந்தான். தேவனுடைய வீட்டின் மேல் வாஞ்சையும் தவனமுமாய் உள்ள ஓர் அர்பண ஜீவியம். உன்னோடு எப்படி.*

## ஈட்டியை, தன் கையிலே பிடித்து உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்: வாதை நின்று போயிற்று. (பினெகாஸ்)

தேவனுடைய பிள்ளைகள் தேவனற்ற ஜனங்களுடன் கலந்து பரிசுத்தத்தை குலைச்சலாக்கி தேவகோபாக்கினைக்கு உட்பட்டு



போவதை (வாதை தொடர்ந்து அனேகரை அழிப்பதை) ஓர் உண்மையான தேவனுடையமகன்/மகளால் தாங்கிக் கொள்ள முடியாது. தேவன் சார்பாக நின்று செயலாற்றுவார்கள். பினெகாஸ் எழும்பும் மட்டும் அந்த வாதையால் மரித்தவர்கள் 23000பேர். **நீ ஆண்டவருக்காய் எழும்ப தாமதிக்கும் போது ஆத்துமாக்களின் அழிவும் அதிகரித்து கொண்டு செல்கின்றது என்பதனை மறவாதே.** செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக் கும் நடுவே

நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. **எண்ணாகமம் 16:48 செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான் அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.**

கர்த்தர் பட்சத்தில் நிற்கும் வைராக்கியமும் அநீதியான தேவகோபாக்கினையை வருவிக்கும் செயல்களைக் கண்டு பரிசுத்தத்திற்காக எழுந்து நின்று செயல்படுவாயாக. வெளியரங்கமாய் உன் பக்தியையும் பரிசுத்தத்தையும் காண்பி. இயேசுவுக்கு நீ வேண்டும்.

**உன் பிள்ளைகள இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன் இன்னும் எல்லாருக்கும் இளைவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடு மேய்த்துக் கொண்டு இருக்கின்றான். அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி ஆள் அனுப்பி அவனை அழைப்பி. (தாவீது)**



குடும்பத்திலிருந்து மிகத்தொலைவில் அற்பமானதும் யாரும் பெரிதாக மதிக்காததும், ஒருவருடைய எண்ணத்திலும் பெரிய தாக்கத்தையோ அல்லது பெரிய அளவில் பிடிப்பையோ ஏற்படுத்தாத ஓர் தொழிலை செய்து வந்த இளைஞன் தாவீதை தேவன் கண்ணோக்கிப் பார்த்தார். **பெற்றோராலும், சகோதரராலும் (நெருங்கிய இரத்த உரித்துக்கள்) மறக்கப்பட்டாலும் இயேசு உன்னை ஒரு போதும் மறந்து போகமாட்டார்.** ஆவியில் எளிமை யான ஜீவியமும், தனக்கு கொடுக்கப்பட்ட வேலையில் உண்மையும், உத்தமமுமாய் உள்ள ஜீவியத்தை தேவன் நோக்கிப்பார்க் கின்றார். எவ்விதமாக தேவன் சின்ன தாவீதை தெரிந்து கொண்டு பெரிய ராஜாவாக மாற்றினாரோ! அவரால் உன்னையும் தனக்காக பயன்படுத்த முடியும். **கீழ்ப்படிந்து, தாழ்மையாய் அவருக்கு ஒப்புக்கொடுப்பாயா? இயேசுவுக்கு நீ வேண்டும்.**

இதை வாசிக்கும் சகோதரரே உங்களுடைய வாழ்விலும் தேவகரம் அமர்வதற்கும், செயற்படுவதற்கும் இன்றே அர்ப்பணிப்பீராக. ஆடு மேய்க்கும் பணியிலே தாவீது தன்னை முழுமையாக அர்ப்பணித்தான் என்பதனை புரிந்து கொள்வீராக. எதைச் செய்தாலும் மந்தையின் நன்மைக்காகவே தன் பணியை ஆற்றினான்.

**இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது (மரியாள்)**

ஆண்டவர் மரியாளிடமாக சொன்ன வார்த்தை அவளால் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ, தடு

மாற்றமும் சங்கடமும் நிறைந்ததுமாய் இருந்தாலும் அவள் அதற்கு தன்னை முற்றுமுழுதாக தாழ்த்தி அர்ப்பணித்ததைக் காணலாம். **என்னதான் நிந்தை அவமானம் வந்தாலும் அவருக்காக அதை சகித்து சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாள்.**

தன் கன்னிப்பருவத்தில் கர்த்தரின் சித்தம் செய்ய தன்னை முற்றிலும் தத்தம் செய்த அருமையான வாலிபப் பெண். தன்னை சுற்றியுள்ளவர் களைப் பார்த்து அவள் தனக்கு வந்த நல்ல செய்தியை நிராகரிக்கவோ, தள்ளிவிடவோ இல்லை. மாறாக தேவனே உம்முடைய சித்தம் என முழுமையாக கூறி அர்ப்பணித் தாள். **தேவ வசனத்துக்கும் தேவதிட்டத்திற் கும் அர்ப்பணம் செய்யும் நீ இயேசுவுக்கு வேண்டும்.** மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், அவர்கள் என்ன சொல்லுவார்கள் என்பதனையே வாழ்க்கையில் முன்நிறுத்தி தேவ விருப்பத்தையும் அவர் உன் மூலம் கொண்டுவர இருக்கும் பெரிதான காரியங்களை அவித்துப்போடாதே. தடைபண்ணிவிடாதே.



உன்மூலமாகத்தான் தேவன் செயற்படவிரும்புகின்றார். விசேஷமாக நீ இருக்கும் தேசத்தில் தேவனின் பிரதிநிதியாக உன்னைத்தான் அவர் எதிர்பார்த்து காத்து நிற்கின்றார். அவரின் எதிர்பார்ப்பிற்கு துரோகம் செய்து விடாதே. நீ இயேசுவுக்கு மிகவும் முக்கியமானவன்(ள்). காலம் தாழ்த்தாமல் முழுமையாக உன்னை அப்பா இயேசு கையில் ஒப்படைப்பாயாக.

**"கிறிஸ்துவுக்காக இழந்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை"**



அன்பரின் அறுவடையில்.

போதகர் வேதநாயகம் சுமணன்.

## வினாவிடை – 44 சரியான விடை எழுதியவர்கள்

01. பா.கோமதி - காரைநகர்
02. பா.தர்சினி - காரைநகர்
03. ம.டயானி - பாண்டவெட்டை
04. பா.வதனி - காரைநகர்
05. பா.மோகனதாஸ் - காரைநகர்
06. பா.டிலானி - காரைநகர்
07. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
08. சூ.ஜான்சி - நாவற்குழி
09. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
10. மேரிஜஸ்ரீனா - ஊர்காவற்றுறை
11. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
12. க..றெஜிவன் - ஊர்காவற்றுறை
13. ம.ரீகா - ஊர்காவற்றுறை
14. வி.நிதர்சன் - ஊர்காவற்றை
15. எஸ்.மார்க்கிறேட் - மீசாலை

# பெயர் தெரியாதவர்கள் செய்த பெரிய வேலை!




வேதாகமத்திலே அழகான, பெரிய, தத்ரூபமான, வரலாற்றை மாற்றும், புதிய சகாப்த வரலாறுகளை உள்ளடக்கிய பெரும் காரியங்களை உள்ளடக்கிய நிறைய சுவாரஸ்யமான கதைகள் உண்டு. அதிலே ஓர் உண்மைச் சம்பவத்தை இங்கே நாம் பார்க்கலாம்.

**11இராஜாக்கள் 5:1-14 1. சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான் அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார் மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். 2. சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள் அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். 3. அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். 4. அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான். 5. அப்பொழுது சீரியாவின் ராஜா: நல்லது நீ போகலாம், இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான் அப்படியே அவன் தன் கையிலே பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோய், 6. இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான் நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது. 7. இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?**

இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்றான். 8. இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்ட செய்தியைத் தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். 9. அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான். 10. அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். 11. அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். 12. நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப்போனான். 13. அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பணணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம்என்று சொன்னார்கள். 14. அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின் படியே யோர்தானில் ஏழு தரம் முழுகின போது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.



இங்கே 13ம் வசனத்தில் ஓர் வேலைக்காரர்கள் இந்த சந்தர்ப்பத்தில் சரித்திரத்தையே மாற்றுகிறார்கள். அநேக மக்களும், தலைவர்களும், அதிகாரிகளும் தமது ஸ்தானத்துக்கும் தமது அதிகாரத் துக்கும் தக்கதான பதில்களையும், செயல்க ளையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஆண்டவரின் திட்டமோ, தகுதிக்குறைவான, சாதாரணமான, மதிப்பற்ற, செயலற்ற, காரியங்களை, மனிதரைக் கொண்டு பெரும் செயற்பாடுகளை நடத்த தேவன் திட்டம் பண்ணுகின்றார்.

ஒரு வேளை இதை வாசிக்கும் நண்பனே உனது வாழ்விலும் உனது நோய்க்காக, பணத்துக்காக, திட்டங்களுக் காக, பயணங்களுக்காக, பாதுகாப்புக்காக, எதிர்கால வேலைகளுக்காக, பிள்ளைகளின் நற்காரியங்களுக்காக, உன்னை சந்திக்கும் **சிறிய செய்திகளை அல்லத் தட்டுகிறாயா? இதைவிட மேலான ஒன்று என்ன தெரியுமா?** உன்னுடைய வாழ்வுக்கு வரும் அநேக செய்திகளின் நடுவே நித்தியத்தைக் குறித்த செய்தியும் அதாவது மரணத்துக்குப் பின்னரான வாழ்வு பற்றியது. இந்த தருணத்திலும் உனக்கு உண்டாகும், கிடைக்கும் செய்திகள், சந்தர்ப்பங்கள், வேலைக்காரர் பேச்சுப் போலத்தான் தெரியும். அல்லது பைத்தியக்காரப் பேச்சாக இருக்கும்.

அருமையான நண்பரே! பரலோக நித்திய வாழ்வுப் பயணத்துக்கு ஆயிரம் ஆயிரம் மதங்களும் மார்க்கங்களும் மடைதிறந்த வெள்ளமாய் புதிது புதிதாய் அறிக்கைகளையும் சடங்குகளையும் வெளிவிடலாம். ஆனால் **கிறிஸ்துவே இரட்சகர் என்று அறிக்கையிடாத எந்த வாழ்வும் பரலோகம் போக முடியாது.**

**எனவே நண்பரே உன்னை சந்திக்கும் ஓர் துண்டுப்பிரசுரம், ஒரு சபையைத் தாண்டும் போது கேட்கும் ஓர் அல்லேலூயா சத்தம், அயல் வீட்டு ஆராதனைச் சத்தம், நீ பார்க்கும் ஓர் படக்காட்சி, நீ கேட்கும் ஒலிநாடாச் சத்தம், ஓர் வேளை நாகமான் சுகமாக வழிபண்ணிய வேலைக்காரரின் சத்தம் போன்றதாகும்.**

**எனவே இன்றே நீ சிந்திப்பாயா? உன் நிலையை விட்டு சிந்தி! நீ சுகவாசியாகி பரலோகவாசியாவாய்.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 42
# சரியான பதில் எழுதியவர்கள்

01. ம.டயானி - பாண்டவெட்டை
02. ம.றீகா - ஊர்காவற்றுறை
03. பா.தர்சினி - காரைநகர்
04. தே.மேரி அக்னேஸ் - ஊர்காவற்றுறை
05. உ.டெல்சியா - ஊர்காவற்றுறை
06. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
07. து.கிருஸ்ண குமார் - ஊர்காவற்றை
08. இ.துரைரட்ணம் - ஊர்காவற்றுறை
09. உ.டிறோன் - ஊர்காவற்றுறை
10. ந.யோசுவா - ஊர்காவற்றுறை
11. ம.மேரிஜஸ்ரீனா - ஊர்காவற்றுறை
12. க.மஞ்சுளா -
13. ஜே.நிதர்சினி - ஊர்காவற்றுறை
14. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
15. சி.பியூலா - மானிப்பாய்
16. சி.சாமுவேல் மொறிஸ் - மானிப்பாய்
17. பி.நேசமணி - மானிப்பாய்
18. ஜெயந்தி - மானிப்பாய்
19. பா.டிலானி - காரைநகர்
20. பா.வதனி - காரைநகர்
21. பா.மோகனதாஸ் - காரைநகர்
22. பா.கோமதி - காரைநகர்



# பக்தர்களின் பயிலகம்

## புளித்தமா

### IV) ஏரோதின் புளித்த மா – மாற்கு 8:15

ஏரோதின் புளித்த மாவைக்குறித்து இயேசு சீஷர்களுக்கு எச்சரிக்கின்றார். ***ஏரோது பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியை ஆண்டான்.*** அவனது வாழ்க்கையின் தத்துவம் என்னவென்றால் ***யூதர்களிடமிருந்து தான் விரும்புவதை பெற்றுக்கொள்ள அவர்களுடன் ஒத்துப்போவான்.*** ரோமரிடமிருந்து பெற்றுக்கொள்ள அவர்களுடன் ஒத்துழைப்பான். ***ஏரோதின் புளித்தமாவானது உலக சிநேகமும் விட்டுக்கொடுத்து ஒத்துப்போவதுமாகும்.***

ஜனங்கள் சொல்லுவார்கள **"உலகத்தை ஆதாயப்படுத்த உலகத்தோடு ஒத்துப்போக வேண்டும்"** ***வேதத்தின் போதனையோ மாறானது.*** சபையானது உலகத்தை கவர உலகத்தைப் போல் இருக்கக்கூடாது என்பதே. **நாம் ஒரு நோயாளிக்கு உதவி செய்ய நோயாளியாக மாறுவதில்லை.** எனவே கிறிஸ்தவர்களும் சபையும் பிரித்தெடுக்கப்பட்ட நிலையில் நிற்க வேண்டும். **உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை – யாக்கோபு 4:4, ஏசாயா 1:3**

### V) சதுசேயருடைய புளித்தமா - மத்தேயு 16:16

இது அவிசுவாசமாகும். ***சதுசேயர் தேவதூதன், ஆவி உயிர்த்தெழுதல் என்பனவற்றை விசுவாசிப்பதில்லை - அப்போஸ்தலர் 23:8.*** நாம் தேவ வசனத்தை விசுவாசித்து அதின்படி செய்ய வேண்டும். ***அவிசுவாசம் அநேக ஆசீர்வாதங்களைத் தடைபண்ணுகின்றது.*** வேதம் சரியா பிழையா என யோசிக்க வேண்டும் என யாராவது வந்தால் ஜாக்கிரதையாயிருங்கள். ***நாம் தீர்ப்புக் கூறுவதற்கு தேவனுடைய வசனம் கொடுக்கப்படலில்லை.***

தேவ வசனமே நமக்கு தீர்ப்பளிக்க வேண்டும். ***அதை நியாயம் தீர்க்கும் உரிமை நமக்கு இல்லை.*** எனவே அதை வாசித்து கற்று, தியானித்து விசுவாசிக்க வேண்டும். ***அவிசுவாசம் வளர இடம் கொடுப்பீர்களானால் உங்கள் மீதுள்ள தேவ வார்த்தையின் வல்லமையை இழந்து விடுவீர்கள்.***

## VI) தவறான உபதேசமாகிய புளித்த மா – கலாத்தியர் 5:8-9

கலாத்திய சபைக்குள் சிலர் வந்து தப்பான உபதேசம் போதித்தார்கள். ***கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டதாலும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்றார்கள்.*** நீங்கள் வைத்த விசுவாசத்தின் மூலமாகவும் நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு கீழ்ப்படிவதன் மூலமாகவும் தான் பரிசுத்தமாக்கப்படுவீர்கள் என போதித்தனர். ***சிலர் சில சட்ட திட்டங்களைப் போட்டு எம்மை ஆவிக்குரியவர்களாக மாற்ற முற்படுவர்.*** **கலாத்தியர் 5:9 புளிப்புள்ள கொஞ்ச மா பிசைந்த மா முழுவதையும் கெட்டுப்போகப் பண்ணும்.**

**கலாத்தியர் 5:8 இந்த போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.** எனவே தவறான உபதேசம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ***புளித்தமா தொற்றும், கெட்டுப்போகப்பண்ணும்.*** எனவே முடிவாக: **சங்கீதம் 139:23-24 தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.** புளித்தமாவை வாழ்க்கையை விட்டு அகற்றுங்கள்.

துர்க்குணம், பொல்லாப்பு, மாய்மாலம், உலகசிநேகம், இழிவான ஆதாயத்துக்காக ஒத்துப்போகுதல், அவிசுவாசம், தப்பான உபதேசம் என்ற புளித்த மாவை நம்மைவிட்டு அகற்றுவோம்.

**தேவனின் விருந்தாளியாக வளருங்கள்.** குற்றமில்லா ஜீவியத்தை தேவன் உங்களுக்கு தருகின்றார்.

**முற்றும்.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

***பொல்லாப்பு:- நீதி, நியாயம், சத்தியம், கனம், நல்நடத்தை போன்றவற்றை மனதில் அவமதிப்பது. இவர்களுடைய சிந்தையிலும் வாழ்விலும் தீமை, நடத்தைக்கேடு, குற்றவியல்பு காணப்படும். இவர்கள் ஒருவரை பேச்சிலே அகப்படுத்தும்படி யோசனை பண்ணுவார்கள்.***

# அருட்பணியாளர் சரிதை
## கிளீசன் லெட்யார்ட்



**காட்டுப்பிரதேசங்களிலுள்ள மிஷனரிகளை விமானம் மூலம் மிஷனரிப்பணிக்கு அனுப்பியது தேவ ஆசீர்வாதமான செயலாக அமைந்தது.** ஆர்டிக் பிதேசம் உறைபனி பெய்து பனிக்கட்டிகளினால் நிறைந்திருப்பதாலும் காலநிலை மிகவும் அபாயமாக இருப்பதாலும், இப் பிரதேசத்திற்கு வேறு முறைகளில் பிரயாணம் செய்வது கடினமாக இருந்தது. இங்கே சனத்தொகை மிகவும் குறைவாக இருந்தாலும் மிஷனரிகள் சிதறியிருந்ததாலும் இவர்களுக்குத் தேவையான விமான ஓட்டிகளின் சேவை அக் காலத்தில் இருக்கவில்லை. ஆகவே அந்தப் பகுதியிலுள்ள மிஷனரிகள் தாமாகவே விமான ஓட்டிகளாக செயற்பட்டனா. **அத்தகைய நபர்களுள் குறிப்பிடத்தக் கவர் விமான ஓட்டுனரான சுவிசேஷகர் கிளீசன் லெட்யார் என்பவராவர். இவா எஸ்கிமோ கொஸ்பல் குருசைட் எனும் நிறுவனத்தின் தலைவரும், இயக்குனருமாவார். இவர் 1946இல் ஹட்சன் பே எனும் பிரதேசத்தில் தனது பணியினைத் தொடங்கினார்.**

ஆர்டிக் பிரதேசத்திலுள்ள மஷனரி விமான சேவைப்பணியானது, காடுகளிலே செய்யப்படும் பணிகளைவிட மிகவும் கடினமானதாக காணப் பட்டது. **தொலைதூர விமானப்பறத்தலின் போது அது தரையிறங்குவதற்குரிய அடையாளங்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. முன் கூட்டியே கூறுவதற்கு இயலாத கடினமான திடீர் காலநிலை மாற்றங்கள் ஒவ்வொரு விமானப்பயணத்தையும் அபாயமுள்ளதாக எண்ணச் செய்தது.** பனியின் காரணமாக உடனடியான தரையிறங்கும் நிகழ்வானது எதிர்பாரா விதத்தில் ஏற்படும் போது எஸ்கிமோக்கள் விசக்கும் பனிக்கட்டியிலான குடிசைக் கட்டிடமொன்றை அமைத்து பலமான புயற்காற்று ஓயும்வரை அக் குடிசையிலேயே காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். வெப்பநிலையானது பூச்சியத்திற்கும் நாற்பது, ஐம்பது டிகிரி செல்சியஸ் இற்கும் இடையில் வரும் போது விமானத்தின் எஞ்சினின் புலோ பொட்ஸ் (Blow Pots) ஐ சூடாக வைத்திருக்க வேண்டியிருப்பதால் சில வேளைகளில் இரண்டு மூன்று நாட்கள் பயணத்தை தொடரமுடியாமல் ஓரிடத்திலேயே தரித்திருக்க வேண்டியதாயிருக்கும். மிகவும் குறைவான வெப்பநிலையின் காரணமாக விமானம் உயரமாகப் பறப்பது

அபூர்வமாக இருக்கும். சில நேரங்களில் திடீர் காற்று வீச்சு, பனி என்பவற்றில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக விமானம் நிலத்திலிருந்து 10அடி உயரத்திலேயே பறக்கும்.

எஸ்கிமோ மக்களுடனான கிளீசன் லெட்யார்டின் வடதுருவ ஊழியமானது மனைவியாகிய கதிரினைப் பிரிந்து சேவை செய்வதினால் பதட்டமுள்ளதாகவும் இருந்தது. **கிளீசன் அந்தப் பின்தங்கிய பகுதியில் வாழும் சுவிசேஷத்தை ஒரு போதும் கேள்விப்பட்டிராத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக விமானம் மூலம் சென்ற வேளையில் கதரீன் மிஷனரித்தளத்திலேயே தங்கியிருந்து எஸ்கிமோ மக்களுக்கு ஒரு மிஷன் பாடசாலையை நடத்துபவளாகக் காணப்பட்டாள்.** பல்வேறு சந்தர்ப்பங்களின் போது ரேடியோ தொலைத்தொடர்பு வசதியானது தடைப்படும். அத்தகைய சூழ்நிலையில் **தன்னுடைய கணவர் உயிருடன் இருக்கின்றாரா? மரித்துவிட்டாரா என்பது பற்றி அறிய கதிரீனிற்கு பல நாட்கள் செல்லும்.** ஹட்சன் பே பகுதியிலே மிஷனரி விமானப்பணி சேவையினை ஆரம்பித்த சிறிது காலத்திற்குள் இவ்வாறான தொரு சம்பவம் நடைபெற்றது.

*கிளீசன் ஒரு மாதத்திற்கு தேவையான உணவு, விமானத்திற்கு தேவையான எரிபொருள் ஆகியவற்றுடன் 1000மைல் தூரத்திற்கான தனது மிஷனரிப்பயணத்தை ஆரம்பித்தார். அவர் விமானத்தை ஆகாயத்தில் செலுத்தி உயர எழுந்த ஒரு மணித்தியாலத்திற்குள்ளேயே அவர் தனது பாதையை மாறிவிட்டார்*

*வரை தனது பறத்தலைத் தொடர்ந்தார். அவர் வடதுருவத்திலே தன்னுடைய பாதையைத் தவறி விட்டார் என்பது அன்று சாயந்திரம், அவருக்கு மிகவும் தெளிவானது. வானொலித் தொடர்பு அற்றுப்போனது. விமானத்திற்கு தேவையான எரிபொருளும் அரைவாசி முடிந்து விட்டது. மிக விரைவாக கொடூரமான காலநிலை நெருங்கியதும் அவர் சிறிய ஏரியின் கரையோரமாக தரையிறங்கி அங்கே சிறியதொரு கூடாரத்தை அமைத்து பயணத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டார். அவரிடம் இருந்த சிறிய வேதாகமமே அப்போது அவருக்கு ஆறுதலைக் கொடுத்தது. அது ஒரு மன உளைச்சலைத் தந்த நேரமாக இருந்தது.*

அதைக் குறித்து அவர் பின்னர் கூறும் போது, **"நான் இப்போது எங்கிருக்கின்றேன்? வீட்டை நோக்கிச் செல்ல சரியான பாதையை நான் எப்படிக் கண்டுபிடிப்பேன்? விமானம் பறப்பதற்கு தேவையான மேல்நோக்கிச் செல்லும் பலமான காற்று வீசும் வரை நான் காத்திருக்க வேண்டுமா? சூரியன் எனக்கு வழிகாட்டும் ஆனாலும் அது கருமேகங்களினால் மறைக்கப்பட்டுள்ளது. நட்சத்திரங்கள் எனக்கு வழிகாட்டும் ஆனாலும் இராத்திரி வேளையும் சற்று வெளிச்சமுள்ளதாக இருப்பதால் நட்சத்திரங்களைப் பார்க்க முடியவில்லை. நான் இப்போது செய்யக்கூடிய காரியம் காத்திருப்பது மாத்திரம் தான், அது ஒருசில நாட்கள் தொடரக்கூடும்"** எனக்கூறினார்.





தொடரும்....

# பூவரி

**மு த் து க் க ள்**

கடைசி நிமிடத்தில்
தேவனின் செயல்
வல்லமையாகும்

நீ தான் என்றால்
நான்
சாகவில்லை

உலகமே
மணியடிக்கிறது
ராஜாவின் வருகைக்காய்

எருமைத் தோல்
போன்றது பெருமையின்
அலங்காரம்

ராஜ்ஜியங்கள் அதிருகிறது
ராஜாவைத் தேடி
வரவேற்கும் மக்களோடு

சிரிப்பது கற்றிட
தேவை
நன்றி உள்ளம்

உண்மைக்கு ஒரு
சோடனை
மாயமாலம்

நான் உனக்காக
செய்தேன்—என்பவர்
இயேசு கிறிஸ்து மாத்திரமே

பொய் பேசும்
வாழ்வு – ஓர்
பட்டாசாகும்

மண்ணில் முடிவது
விண்ணில் தொடர்வது
தேவகிருபை



# அனலின் ஆன்மீக விருந்து

## தேவனுடைய சமூகத்தில் மௌனமும் உண்மையான உபவாசமும்

**கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள். கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார். இது ஆண்டவருடைய நாளைக்குறித்து பேசுகின்றது.**

வெளிப்படுத்தல் 8ம் அதிகாரத்திலும் அரை மணிநேர மௌனம் அங்கேயும் காணப்படுகின்றது. **தேவனுடைய பிரசன்னத்திலே அமைதியாக இருப்பதனை சபையானது தவறவிட்டுவிட்டது.** முன்னைய நாட்களில் மிஷனெரிகளின் வாழ்க்கையை அவதானித்துப் பார்த்தால் அவர்கள் ஆண்டவருக்கு முன்பாக அமைதியாக காத்திருந்தார்கள். அப்படி அவர்கள் இருந்த பொழுது ஆண்டவர் அவர்களை மறுரூபப்படுத்தி, பல தரிசனங்களையும், பல இடங்களுக்கும் அவர்களை அழைத்துச சென்றார். **ஆனால் இன்றைய காலகட்டத்தில் என்ன காரியம் நடைபெறுகின்றது? அநேக ஊழியர்கள், விசுவாசிகள் சத்தம் போட்டு பேசுவதற்கு பழகியிருக்கின்றார்களே தவிர அமைதியாக தேவன் பேசுவதை செவிமடுக்க பழகவில்லை.** ஒரு வார்த்தை கூட பேசாமல் தேவ பிரசன்னத்தில் தேவ சத்தம் கேட்பதற்கு எவ்வளவு நேரம் காத்திருக்கின்றீர்கள் என்பதிலே தான் உங்களுடைய முதிர்ச்சி தங்கியிருக்கின்றது.

இயேசு ஒரு அமைதியான இரவு வேளையில் தான் பிறந்தார். அமைதியின் வல்லமையிலே அனேக வரலாற்றுக் காரியங்கள் நடைபெற்றதனை நான் உங்களுக்கு காண்பிக்க முடியும். உங்களுக்கு ஒரு உதாரணத்தை சொல்ல முடியும். *உங்களுக்கு ஒரு பிள்ளை இருக்குமாய் இருந்தால் நீங்கள் ஒரு சுற்றுலா சென்று ஐந்து நாட்களுக்கு பிற்பாடு வீட்டுக்கு திரும்பி வரும் போது அந்தக் குழந்தை உங்களைக் காணும் போது அது சந்தோஷத்தால் நிரம்பியிருக்கும். மேலும் கீழுமாக மீண்டும் மீண்டுமாக துள்ளும். திடீரென்று பெற்றோர் இந்தப் பிள்ளையைத் தூக்கி தங்களுடைய மார்பிலே சாய்ந்திருக்கும்படியாக வைப்பார்கள். மெதுவாக அந்தப் பிள்ளையைத் தொட்டு அரவணைக்கின்ற போது அந்தப் பிள்ளை தன்னுடைய தகப்பனுடைய கரங்களுக்குள் தன்னை விட்டுக்கொடுக்கும். அந்தப் பிள்ளை சொல்லும் அப்பா, என் மீது சந்தோஷமாயிருங்கள்.*

**அனேகர் அனேக தடவைகளில் ஆண்டவரே நான் உம்மை சந்தோஷமாக வைத்திருக்க விரும்புகின்றேன், எங்களுக்கு எல்லாம் தேவை ஆகவே நீர் எங்களோடு இருக்க வேண்டும். தேவனும் எங்கள் மீது சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்பதனை எத்தனைபேர் நினைத்திருக்கின்றீர்கள்.** ஏனென்றால் தன்னைப் பிரியப்படுத்தும்படியாகவே ஆண்டவர் எங்களை உருவாக்கியிருக்கின்றார். நேரம் வருகின்ற பொழுதெல்லாம அவர் எங்களை தூக்கி சுமந்து சந்தோஷப்படுத்துவதற்கு எங்களை ஆண்டவருக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் ஆண்டவரோடு ஒரு அற்புதமான நேரம் எனக்கு இருப்பதுண்டு. ஏறத்தாழ ஒரு மணித்தியாலம் ஒரு வார்த்தையும் பேசாமல் தேவனுடைய பிரசன்னத்தை அனுபவித்துக் கொண்டிருப்பேன். நான் சொல்வேன் நீர் சந்தோஷமாய் என்னைப் பாரும். **பாவத்தை மேற்கொள்வதற்கான ரகசியம் என்ன தெரியுமா? தேவன் உங்களில் எப்படி சந்தோஷப்படுகின்றாரோ அந்த வழியை நீங்கள் அறிந்து கொள்கின்ற போது பாவத்தை மேற்கொள்ள முடியும்.**

ஆகவே இன்றைக்கு சொல்லுங்கள்: ***ஆண்டவரே என்னை மன்னியும், நான் சுயநலமாய் இருந்து விட்டேன், நான் என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று வாழ்ந்து விட்டேன். ஆண்டவரே இன்றைக்கு நான் மனந்திரும்புகின்றேன்: உம்மை பிரியப்படுத்துவதற்காக நீர் எங்களை உருவாக்கினீர், ஆகவே ஆண்டவரே என் மீது சந்தோஷமாய் இரும்.*** தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிப்பதற்கு நீங்கள் துள்ளிக் குதித்து ஒன்றும் செய்யத் தேவையிலலை. முதல் தடவையாக தேவசமூகத்திற்கு வரும் போது அந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறும். அக்கினி அவர்களின் மேல் வந்த போது அந்த இடம் அசைந்தது என்று அப்போஸ்தலர் நடபடிகளில் பார்க்கின்றோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் தேவனைத் தேடும் போது இடம் அசைந்தது என்று வாசிக்கின்றோமா? தேவனுடைய வார்த்தையில் வளர்ந்து முதிர்ச்சி அடைகின்ற நிலைக்கு வந்த போது அவர்களுக்கு ஒரு காரியம் தெரியும், **அந்த வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து தங்களுக்குள்ளாய் இருக்கின்றார் என்பதனை புரிந்து கொண்டார்கள்.** அனேகர் இயேசு கிறிஸ்துவை உங்களுடைய ஆவிக்குள்ளாய் வைத்திருக்கின்றீர்கள். ஆனால் அவர் உஙகள் சிந்தைக்குள்ளாயும் வரவேண்டும்.

ஆகவே தான் அனேக தடவைகள் எங்களுடைய சிந்தையோடு போராடிக் கொண்டிருக்கின்றோம். **தேவனுடைய பிரசன்னத்திலே அமைதியாய் காத்திருந்து தியானம் பண்ணி தேவனுடைய வார்த்தையை வாசித்துக் கொண்டு வரும் போது நீங்கள் அந்த சிந்தனையில் இருந்து விடுதலை பெறமுடியும்.** ஆண்டவருடைய பிறப்பிற்கு முன்பதாக சிமியோன், அன்னாள் என்று சொல்லப்படுகின்ற இருவருவம் ஆண்டவரை நோக்கி உபவாசித்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். நான் அனேக தடவைகளில் செல்கின்ற இடமெல்லாம் அவதானிக்கின்றேன், அனேக சிமியோன்களும், அனேக அன்னாள்களும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களைக் குறித்து அனேகருக்குத் தெரியாது. தேவனுடைய பிரசன்னத்திலே அமைதியாக காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

***நான் அண்மையில் இலங்கைக்கு வருவதற்கு முன்பதாக ஒரு முதிர்ந்த தாயாரைச்***

சந்தித்தேன். அவர்களுக்கு 74 வயது. அவரோடு நான் பேசும் போது (ஆண்டவர் அவர்களோடு ஓர் நண்பனைப் போல் பேசிக்கொண்டிருப்பார்). நான் அந்த தாயாரைப் பார்த்து கேட்டேன், அம்மா ஆண்டவர் உங்களுக்கு என்ன சொன்னார்: அந்த அம்மா சொன்னார், ஐயோ நான்கு நாட்களாக அவர் என்னோடு பேசவில்லை, என்ன தவறு செய்தேனோ தெரியவில்லை என்றார். இன்றைய நாட்களில் எத்தனை பேர் சொல்ல முடியும் என்னுடன் ஆண்டவர் கடந்த நான்கு ஆண்டுகளாக பேசவில்லை என்று. பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதனைக் குறித்து நான் பேசவில்லை. தேவன் பேசுவதனை காதால் கேட்பதனைக் குறித்து பேசுகின்றேன். அந்த "ரேமா" வார்த்தை உங்களை மாற்றுகின்றதாய் இருக்கின்றது. ஆகவே ஆண்டவர் உங்களைப் புதிதாக்க விரும்புகின்றார். அதற்காக ஆண்டவரைப் பார்த்து ஆம் என்று சொல்ல முடியுமா?

ஆராதனைகளில் நீங்கள் கலந்து கொள்ளவரும் போது உங்கள் போதகர் சொல்வார், உங்களுடைய வாழ்க்கையிலே துன்பம், துக்கம், வேதனை இருக்கும். ஆனால ஆண்டவரைப் பார்த்து ஆராதியுங்கள். அது எல்லாம் போய்விடும். நீங்கள் சொல்வீர்கள்: போதகரே நான் மிகவும் பாரத்தோடு வந்தேன், ஆராதனை மிகவும் அருமையாக இருந்தது. நான் எல்லாவற்றையும் மறந்து ஆராதித்தேன். அதன் பிற்பாடு எல்லாம் இலகுவாக இருந்தது. நான் சொல்ல விரும்புகின்றேன்: அந்த நிலையில் இருந்து அடுத்த நிலைக்குள் நீங்கள் செல்ல வேண்டும். **ஆராதனை உங்களை சந்தோஷப்படுத்தவும் உங்களுக்காகவும் இல்லை அது ஆண்டவருக்காகவே!.**

பிரியமானவர்களே, **ஆண்டவரை ஆராதிக்கின்ற போது அவரிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்வோம் என்று பல தடவைகள் யோசிக்கின்றோம். ஆனால் மிகவும் துக்கமான காரியம் ஆண்டவர் எங்களிடம் இருந்து எதையும் பெற்றுக்கொள்ளவில்லை.** அவருடைய வாழ்க்கையில் இருந்து அவரிடம் இருந்து எதனைப் பெற்றுக் கொள்கின்றோம் என்று இருக்காமல் உங்களுடைய வாழ்கையில் இருந்து தேவன் எதனைப் பெற்றுக் கொள்கின்றார் என்பது தான் முக்கியமான காரியம். அனேகர் உபவாசிக்கின்றார்கள், **மத்தேயு 9:14 அப்பொழுது, யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்து: நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசிக்கிறோமே உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள். மத்தேயு 9:15 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.** அவருடைய சீஷர்கள் அவரிடமிருந்து ஏதாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உபவாசிக்கிறார்கள், அதாவது யோவானுடைய சீஷர்கள். ஆனால் இயேசு சொல்லுகின்றார்: மணவாளனுடைய தோழர் மணவாளன் தங்களோடிருக்கையில் துயரப்படுவார்களோ? நான் இப்பொழுது உங்களோடு இருக்கின்றேன், ஆகவே சீஷர்கள் உபவாசிக்க வேண்டிய அவசியமில்லை. நான் மரித்து பரலோகம் செல்வேன், அந்தக் கணத்தில் மணவாட்டியாகிய சபை மணவாளனை இழந்த நாட்களாக இருக்கும். ஆகவே மண

வாளன் இல்லாத நேரத்தில் மணவாட்டி உபவாசிக்கும். நீங்கள் எந்தக் கூட்டத் தில் இருக்கின்றீர்கள், உபவாசத்தின் மூலம் விடுதலை: சுகம் கிடைக்கும் என்று நம்பி இருக்கின்றீர்களா?

சபையில் எப்பொழுதும் இரண்டு விதமான ஜனங்கள் இருப்பார் கள். எசேக்கியேலில் வாசிக்கின்றோம், சக்கரங்களுக்குள் சக்கரங்கள். அதே போல சபைக்குள்ளே சபை. **அனேக விசுவாசிகள் ஆனால் சொற்ப மணவாட் டிகள். ஒரு கூட்டம் எப்பொழுதும் தேவனுடைய கரத்தை நோக்கி என்ன பெறலாம் என்று பார்த்துக் கொண்டிக் கும். சேஷரத்தினம் என்ற தாயார் சொல்லுவார் கள். ஆலயத்தில் காக்கா கண் உள்ளவர்களையும் புறா கண் களை உடையவா களையும் காணமுடி யுமாம். காக்காக் களைப் போல என்ன பெறலாம் என்ற நோக்கத்தோடிருக் கின்ற கண்களாக அல்லாமல் புறாக் களைப் போல எங்களுடைய கண்கள் எப்பொழுதும் கலங்கியிருக்கட்டும்.** அந்தக் கண்கள் தான் இப்பொழுது இல்லாமல் இருக்கின்றது. இந்தக் காலகட்டத்தில் சபைகளிலே அனேக காகங்கள்: ஆனால் சொற்ப புறாக்களே! காணப்படுகின்றது.

உபவாசித்து ஜெபித்தால் சபைகளில் காக்கைகளைப் போல் இருந்த நாங்கள் புறாக்களைப் போல மாறவேண்டும். தேவ பிரசன்னத் திலே உண்மையாக, நேர்மையாக உள் ளத்தில் இருந்து அறிக்கை செய்கின்ற போது அந்தக் குணங்கள் உங்களை விட்டு வெளியேறும். சில வேளை ஜனங்களுக்கு முன்பாக வெட்கப்பட்ட வர்களாக இருக் கலாம், ஆனால் தேவனுக்கு முன்பாக பாக்கியம் பெற்றவர்களாய் இருப்பீர்கள். ஆகவே ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே நான் காகத்தைப் போல் இருக்க மாட்டேன், புறாவைப் போல என்னை மாற்றும் என்று சொல்லுங்கள். அப்பொழுது தான் தேவனு டைய விடுதலையைப் பெற்றுக் கொள் வீர்கள். ஆகவே ஒரு கூட்ட ஜனம் எப்பொழுதும் தேவனுடைய கரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும். இதைத்தான் யோவானுடைய சீஷர்களும் தங்களுக்கு என்ன கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டி ருந்தார்கள்.

ஆனால் இயேசு சொன்னார், **என்னுடைய மணவாட்டி உபவாசிப்பார் கள், அவர்கள் என்னுடைய கரத்தை யல்ல, என்னுடைய முகத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.** நீங்கள் எந்தக் கூட்டத்திலே இருக்கின்றீர்கள்?. உபவாசத்தின் மூலம் விடுதலை, சுகம் போன்ற பல காரியங்கள் கிடைக்கும் என்று நம்பி இருக்கின்றீர்களா? இந்தியா விலே அனேகர் உபவாசிப்பார்கள், ஏன் உபவாசிக்கிறீர்கள்? என்று கேட்டால், எங்களுக்கு ஒரு சபை கட்டடம் கட்ட வேண்டும் என்பார்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை, ஆனால் நீங்கள் உபவாசிப்பதின் முதற் காரணம் எங்களை நாங்கள் தாழ்மைப் படுத்துவ தற்கே!. நெகேமியா போன்ற எல்லா புத்தகங்களையும் நாங்கள் அவதானிக் கின்ற போது அவர்கள் உபவாசிக்கை யில் தங்களைத் தாழ்த் தினார்கள். **ரஸுஹில் என்ற தேவ மனிதன் இருந்தார். அவர் சொல்கிறார்: அவர்கள் ஜெபித்த பொழுது அந்த இடம் அசைந்தது,** ஆனால் நாங்கள் காசு கொடுக்கின்ற போது இடம் எடுபட்டு போகின்றது. அவர்கள் இடங்களை அசைக்க வேண் டும் என்று இருந்தார் கள், ஆனால் நாங் என்னைப் பார்த்து சொன்னார்: நீ ஒரு

கள் இடங்களை வாங்க வேண்டும் என்று இருக்கின்றோம்.

**உபவாசிப்பதின் நோக்கம் என்ன? இயேசு கிறிஸ்து இல்லாத வேளையில் துயரப்படுவது தான் உபவாசம்.** இயேசு கிறிஸ்துவாகிய மணவாளன் உங்களோடு இல்லை என்பதனை நினைத்து துயரத்தோடு அழுத நேரம் எப்போது? மேசையில் உணவு பரிமாறப்பட்டிருகின்றது, என்னுடைய மணவாளன் என்னோடு இல்லை, ஆகவே சாப்பிட மனம் இல்லை என்று எத்தனை பேர் சொல் வீர்கள்?. அதாவது இயேசு எங்களோடு இல்லை என்பதனால் உபவாசிக்க வேண்டும். **யோவேல் 2:13-14 நீங்கள் உங்கள் வஸ்திரங் களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும் புங்கள் அவர் இரக்க மும், மன உருக்க மும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையு முள்ளவர் அவர் தீங்குக்கு மனஸ் தாபப்படுகிறவருமாயிருக்கிறார். ஒரு வேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போஜனபலிகளையும் பானபலிகளை யும் செலுத்துகிறதற் கான ஆசீர்வாதத் தைத் தந்தருளுவார்.** இந்த உபவாசத் தைக் குறித்து நீங்கள் வாசிக்கின்ற போது இதிலே இருக்கும் முழு செய்தி யும் தேவனை மையப்படுத் தியதாய் இருக்கும். முதல் வசனம் சொல்லுகின் றது: ஒரு வேளை அவர் தீங்கிற்கு மனஸ்தாபப்படுவாரோ. இங்கே ஆணித் தரமாக சொல்லப்பட வில்லை. தேவனு டைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனங்கள் தேவனி டத்தில் திரும்பவில்லை. தேவனை துக்கப்படுத் தியதன் நிமித் தமாக மனஸ் தாபப் பட வேண் டியதாய் இருந்தது.

**இன்றைக்கு அநேக தேவ பிள்ளைகளிடம் காணப்படுகின்ற பிரச் சினை என்னவென்றால், ஏதாவது ஒன்றை பெறவேண்டும் என்றே உபவாசிக் கின்றார்கள். ஆண்டவர் தங்களை ஆசீர் வதிப்பார் என்பதற்கே மனந்திரும்பு கின்றார்கள். தங்களைத் தேவன் பயன் படுத்துவார் என்று நினைத்து ஜெபிக்கின் றார்கள், தங்களுடைய சுயத்திற்காக, ஏதாவது மேலானதைப் பெறவேண்டும் என்று உபவாசிக்கின்றார்கள்.** ஆகவே இன்றைக்கு உங்களைப் பார்த்து சவா லாக சொல்ல வேண்டிய காரியம் உபவா சித்து அழுகையோடு ஜனங்கள் தேவன் பக்கமாக எங்கே மனந்திரும்புகின் றார்கள். வீணாக தேவனுடைய பெயர் தூசிக்கப்படுவதன் நிமித்தமாக எத்தனை பேர் மனஸ்தாப்படுவீர்கள். ஆண்டவரு டைய பெயர் மண்ணுக்குள் இழுபட்டுக் கொண்டு போவதினால் எத்தனை பேர் மனஸ்தாப்படுவீர்கள். இந்த தேசத்திலே ஆண்டவருடைய பெயர் துக்கப்படுத்தப் படுவதின் நிமித்தமாக எத்தனை பேர் அவர்களுடைய பாவங்களுக்காக கதறி அழ ஆயத்தமாய் இருக்கின்றீர்கள். அப்படிப்பட்ட ஒரு உபவாசம் தான் அந்த ஜனங் களிடம் இருந்தது.

*சேஷரத்தினம் என்ற ஓர் தாயார் ஒவ்வொரு வருடமும் நாற்பது நாட்கள் உபவாசித்து கதறி அழுவார்கள். நான் சில வேளைகளில் அவரிடம் சென்று அவருடைய ஜெப விண்ணப்ப குறிப்புக்களைப் பார்ப்பேன், அதில் ஆண்டவரே நான் பாவம் செய்தேன், போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், ஜனங்கள் பாவம் செய்திருக்கிறார்கள், ஆண்டவரே உம்முடைய பெயர் தூசிக்கப்படக்கூடாது, எங்கே ஊழியக் காரர்கள், தலைவர்கள், தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பவர்கள் பாவிகளை வெற்றி கொள்வதற்காக*

அல்ல, தேவநாமம் மகிமைப்பட வேண்டும் என்பதற் காகவே பத்து பதினைந்து வருடங்களாக கண்ணாலே காணக்கூடியதாக கனிகளைக் காணா விட்டாலும் இப்படிப்பட்ட தலைவர்கள் தான் ஆண்டவருக் காக ஊழியம் செய்வார்கள். ஏன் அவர்கள் சேவிக் கிறார்கள் தெரியுமா? அவர்கள் தங்களு டைய சுயத்தை மையப்படுத்தி ஊழியம் செய்யவில்லை. மாறாக தேவனை மையப் படுத்தி ஊழியம் செய்கிறார்கள்.

ஹட்சன் டெய்லர் என்று சொல்லப்ப டுகின்றதான தேவமனிதன் இருந்தார். ஒருவர் அவரைப் பார்த்து கேட்டார், ஏன் நீங்கள் ஊழியம் செய்கின்றீர் கள். அவர் சொன்னார்: இந்த நரகத்திற்கு போகின்ற பாவிகளை நேசிக்கும்படியாக நான் சீனாவுக்கு வரவில்லை நான் இங்கே வந்திருப்பதன் பிரதான நோக்கம் என்னவென்றால் தேவனை மகிமைப்படுத்துவ தற்காகவே. அவர்கள் மனந்திரும்பினால் என்ன மனந்திரும்பாமற் போனால் என்ன தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும் அது தான் என்னுடைய பிரதான நோக்கம் என்று சொன்னார். இதனை நான் சொல்லும் போது தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். அவரு டைய ஊழியத்தைப் பார்த்தால் அநேக ஆண்டுகள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக வேலை செய்தார், ஆனால் அநேக ஆண்டுகள் ஒரு விசுவாசியும் அவருக்கு இருக்கவில்லை, அவர் ஜனங் களை இழந்தார், பணத்தை இழந்தார், சாப்பிடுவதற்கு கூட ஒன்றும் இல்லாதிருந்தார். ஆனால் அவர் சொன்னார்: தேவ ஆட்டுக்குட்டிக்காகவே நான் சேவை செய்கின்றேன். அடிக்கப்பட்டதற்கான, பாடுபட்டதற் கான பலனை தேவ ஆட்டுக்குட்டியே பெற்றுக் கொள்ளட்டும். இதுவே அவருடைய ஜெபமாக இருந்தது.

இன்றைக்கு சீனாவிலே மிகப் பெரிய எழுப்புதல் இருப்பதனை நீங்கள் காணலாம். இதற்கு காரணம்: தேவனு டைய நாமத்தை உயர்த்த வேண்டும் என்ற அந்த பிரதான நோக்கத்தை அங்கே அவர் விதைத்தி னாலேயே. 25வருடங் களாக சேவை செய்கின்றேனே ஒரு விசுவாசியும் இல்லை, ஆகவே நான் என்னுடைய வீட்டிற்குத் திரும்பிப் போகலாம் என்று அதனை விட்டுவிட்டு வெளியேறியிருந்தால், பார்க்கக்கூடிய ஒரு கனியை அங்கு காணவில்லை என்று யோசித்திருந்தால் இன்றைக்கு சீனா ஆண்டவரிடமாய் வந்திருக்காது. இது தான் உபவாசிக்க வேண்டியதின் பிரதான நோக்கம். இந்த உபவாசத்திலே இப்படி ஜெபிப்பீர்களாய் இருந்தால் ஆண்டவர் நிச்சமாயகவே இந்த தேசத்தின் மீது கிருபையாய் இரங்கு வார். இயேசு உபவாசித்ததின் பிரதான நோக்கம் என்னவென்றால், தனக்கும் பிதாவுக்கும் இடையில் இருக்கின்றதான கீழ்ப்படிதலைக் காண்பிக்கும்படியாக அவர் உபவாசித்தார்.

**எபிரேயர் 5:8-9 அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளி னாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு. தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப் படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,** அவர் பாடுகளுக்கூடாக கீழ்ப்படிந்தார். அது தான் ஆண்டவர் உபவாசித்ததின் முதலாவது காரியம். இரண்டாவது, ஒரு முன் உதாரணத்தைக் காண்பிக்கும் படியாக உபவாசித்தார். ஒரு தேவ மனுஷன் இவ்விதமாய் சொல்கின்றார்: உபவாசம் இல்லா விட்டால் அவர்கள் தேவனுடைய நாமத்தை தூஷிக்கின் றார்கள். அனேக வ்சுவாசிகள் சொல்லு வார்கள்எங்களுக்கு குடல்புண் இருக்கின் றதினாலே எங்களால் உபவாசிக்க முடியாது. சில வேளைகளில் என்ன சாப்பிடவேண்டும், என்ன சாப்பிடக் கூடாது என்று உங்களை சீராக்காததின் நிமித்தமாக குடல் புண் தோன்றியிருக்

கலாம். **முன்னைய அனேக பரிசுத்தவான்கள் சொல்கின்ற காரியம்: குடல்புண் இருந்தால் என்ன நான் உபவாசிப்பேன், என்ன நடந்தது தெரியுமா? 21நாட்களின் பிற்பாடு அல்சர் சுகமாகியது.**

எங்களுடைய வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட அற்புதம் நடக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புவதில்லை. இயேசு சொன்னார் **மத்தேயு 6:17-18 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். மத்தேயு 6:2 ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 6:5 அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம் மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள் அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.** உபவாசித்தால் என்று சொல்லவில்லை. மூன்று காரியங்களையும் செய்யும் போது இவைகள் எல்லாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் கட்டாயம் செய்ய வேண்டியவை. நாங்கள் ஆண்டவருக்கு தசம பாகம் கொடுக்க ஆயத்தமாய் இருக்கின்றோம், ஜெபிக் கவும் ஆயத்தமாய் இருக் கின்றோம். ஆனால் உபவாசிப்பதற்கு மிகவும் கடினம். இயேசுவினுடைய வார்த்தைகளை நீங்கள் வாசித்தால்உபவாசிப்பீர்கள்.

அவருடைய கிருபையைக் கேட்டீர்கள் என்றால் நிச்சயம் உபவாசிப்பதற்கு இரக்கம் செய்வார். ஆகவே இன்றைக்கு நான் உங்களுக்கு என்ன சொல்லுகின்றேன் என்றால் நீங்கள் எப்படி கொடுக்கின்றீர்கள், எப்படி ஜெபிக்கின்றீர்களோ அதே போல் உபவாசிக்கவும் வேண்டும். இயேசு உபவாசித்ததின் மூலம் மூன்று காரியங்களை எமக்கு வெளிப்படுத்துகின்றார்.

**1. ஆண்டவர் கீழ்ப்படிதலைக் காண்பிக்கும்படியாக உபவாசித்தார்.**

**2. ஒரு முன் உதாரணத்தை காண்பிக்கும்படியாக உபவாசித்தார்.**

**3. ஆவிக்குரிய போராட்டத்திற்காக உபவாசித்தார். அவர் வனாந்தரத்திற்கு செல்லும் போது பிசாசோடு போராடவேண்டியதாய் இருந்தது.**

**மாற்கு 1:12 உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்.** தேவதூதர்கள் அவருக்கு பணிவிடை செய்ய வந்தார்கள். நான் உங்களுக்கு சொல்ல விரும்பும் காரியம், **நீங்கள் உபவாசிக்கின்ற பொழுது ஆவிக்குரிய நிலையிலே ஒரு திறந்த நிலை ஏற்படும்.** நான் ஊழியத்திலே 10வருடங்கள் தேவனோடு நடந்ததினாலே சொல்கின்ற காரியம்: அனேக தடவைகளிலே வியாதிப்பட்டிருந்தேன், எனக்கு நல்ல சிறுபிராயம் கிடைக்கவில்லை, நல்ல சாப்பாடு கிடைக்கவில்லை. நான் வைத்தியரை நாடிச் சென்ற போது அவர்

நாளும் உபவாசிக்ககூடாது. உபவாசித்தால் உன் வாழ்க்கையை இழந்து போவாய் என்றார். அனேக இளம் வாலிபர்கள் உபவாசிப்பதில்லை. ஏன் தெரியுமா? உபவாசித்தால் மெலிந்து போவோம் என்று சொல்லுவார்கள். எங்களுடைய தோற்றத்தை மாற்ற விரும்புவதில்லை. ஆகவே நாங்கள் எங்கள் சுயத்தை சேவிக்கின்றோம். நாங்கள் நன்றாக, அழகாக, நல்ல தோற்றமாக இருக்க வேண்டும் என்று எங்களைப் பிரியப்படுத்துகின்றோம்.

ஒரு முறை ஒரு தாயார் தன் மகளோடு கதைத்துக் கொண்டிருந்தார், ஒருவர் வந்து சொன்னார் மகளே உன்னுடைய வாழ்க்கையை ஆண்டவருக்கு பிரியப்படுத்த உபவாசித்து ஜெபிக்க வேண்டும். திடீரென்று தாயார் சொன்னார்: எனது பிள்ளை மூன்று மாதங்களின் பிற்பாடு திருமணமாகப் போகின்றது. ஆகவே உபவாசம் இருந்தால் பிள்ளை மெலிந்து போய்விடும். எனவே பிள்ளை மெலிந்தால் யாரும் அவளைத் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்று. இதனால் பிள்ளை உபவாசிக்கவில்லை. ஆனால் அந்தப் பிள்ளைக்கு திருமணமும் நடக்கவில்லை. உபவாசித்தால் உங்களுக்கு திருமணம் நடக்கும் என்று நான் சொல்லவரவில்லை. நீங்கள் திருமணமானால் என்ன திருமணமாகாவிட்டால் என்ன நீங்கள் உபவாசிக்கவே வேண்டும். இயேசுவுக்காய் உபவாசிக்கின்றேன் என்று எத்தனைபேர் சொல்ல ஆயத்தமாய் இருக்கின்றீர்கள்.

கத்தரின் குல்மான் என்ற ஒரு பெண் இருந்தார்கள். அவர்கள் தேவனாலே அதிகமாக பயன்படுத்தப்பட்ட ஒரு பெண். அவர்கள் மேடைக்கு வர முன்பதாகவே ஜனங்கள் எல்லாரும் அழுது தங்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து விடுவார்கள். சில வேளைகளில் ஆலயத்திற்கு நடுவாக நடக்க முடியாமல் திரைக்கு பின்பாக நடந்து வருவார்கள். அவர் வீதியால் நடந்து செல்கின்ற போது பாதணிகள் சுத்தம் செய்பவர்கள் திடீரென நடுங்கிக் கொண்டு இருப்பார்கள். சமையலறைப் பக்கமாய் சென்றால் எல்லாரும் பாத்திரங்களை தூக்கி எறிந்து விட்டு நடுங்கிக் கொண்டிருப்பார்கள். அவரிடம் ஒரு தேவமனிதன் வந்து இப்படி அநேக காரியங்கள் நடப்பதற்கு உன்னுடைய வாழ்கையில் என்ன ரகசியம் இருக்கின்றது என்று கேட்டார். அவர்கள் எந்தப் பதிலும் சொல்லாமல் அமைதியாக சிரித்தார்கள். கர்த்தரின் குல்மான் எங்கே எல்லாம் போகின்றாரோ அங்கே எல்லாம் சென்று இதே கேள்வியை கேட்பார். கர்த்தரின் குல்மானுக்கு தெரியாமல் அவரைப் பின்தொடர ஆரம்பித்தார். ஒரு நாள் ஒரு காரியத்தைக் கண்டார். அநேக நாட்கள் அவர் எதுவுமே சாப்பிடாமல் இருந்தார். கூட்டங்கள் ஆரம்பிக்கும் முன்பதாக அவர் அறைக்குள் சென்று முழங்காற்படியிட்டு ஆண்டவரை நோக்கி அழுது ஆண்டவரே இன்னும் ஒரு தடவை என்னை நம்பும் நான் உதவியற்றவள் என்றார்.

**தொடரும்...**

**தேவன் தாமே உங்களை**
**நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**சுவிசேஷகர் சுஜித்**
**இந்தியா.**

**தேவன் எம்மைப் பிரியப்படுத்துவது அல்ல,**
**தேவனை நாம் பிரியப்படுத்துவதே**
**ஆராதனை**



# குறுக்கெழுத்துப்போட்டி – 43



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | 3 |
| | | | | | 4 | |
| | | 5 | | | | 8 |
| 6 | 9 | | | 7 | | |
| | | | | | | |
| | | | 11 | 10 | | |





## இடமிருந்து வலமாக

1. கழுதையைக் கொண்டு தேவன் இவனுடன் பேசினார்.
5. மோசேக்கு எதிர்த்து நின்றவன்.
6. இது இல்லாவிட்டால் ஒன்றுமில்லை (குழம்பியுள்ளது)
7. தேவனோடு நடந்தவன்.



## வலமிருந்து இடமாக

4. தானியேலின் நண்பன்.
3. இது சிறிய அவயவம் ஆனால் பெரிய நெருப்பு.
10. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள்........ பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

## மேலிருந்து கீழாக

2. இஸ்ரவேல் என பெயர் மாற்றப்பட்டவன்.
1. ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ளும்படி பவுல் இவனிடம் வேண்டினான்.
8. காலேபின் குமாரத்தி.
9. தேவனுக்கு கிட்டிச்சேர வேண்டும். கிட்ட என்பதனை இப்படியும் சொல்லலாம்.



## கீழிருந்து மேலாக

7. இடது கை பழக்கமுடையவன். ஓர் நியாயாதிபதி. (கு/கூ)
4. அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான் இது எனக்கு ஆதாயமென.
11. இயேசு அழைத்த போது பேதுரு இதை பழுது பார்த்துக் கொண்டிருந்தான்.





# குறுக்கெழுத்துப் போட்டி – 42 சரியான பதில்கள்

*இடமிருந்து வலமாக*

01. யோனத்தான்
03. மான்கள்
05. ஸ்திரி
11. வாதை
13. உழ

*வலமிருந்து இடமாக*

03. மாது
06. வளை
10. சொப்பன
12. அன்பால்

*மேலிருந்து கீழாக*

01. யோவன்ஸ்நானன்
02. தாகமாய்
07. அவள்
08. துரிதப்
10. சொல்
13. உன்

*கீழிருந்து மேலாக*

04. களை
09. யோவான்
12. அழகு

# வினாவிடை - 44 சரியான பதில்கள்



01. தாவீது (சங்கீதம் 31:9)
02. முகதுக்கத்தினால் (பிரங்கி 7:3)
03. நெகேமியா (நெகேமியா 2:2)
04. தெக்கோவா ஊர் ஸ்திரி (IIசாமுவேல் 14:2)
05. சங்கீதம் 85:10
06. தானியேல் (தானியேல் 10:5)
07. யோவான் (வெளிப்படுத்தல் 1:9-13)
08. தானியேல் (தானியேல் 10:5-6)
09. காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்: மேகத்தை கவனிக்கிறவன் அறுக்கமாட்டான் (பிரங்கி 11:3-4)
10. தன் காலத்தை அறியாத மனுஷன் (பிரசங்கி 9:12)



## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

To: ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................